**மெதிரிகிரிய பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 29 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 24 ஆந் திகதியும்தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மெதிரிகிரிய பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | இரண்டு அரச வங்கிகளின் நிலையான வைப்புகளுக்குரியதாக சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 245,143 ஆன வட்டி வருமானம் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பேரேட்டுப் பதிவு இலக்கம் 17 மற்றும் 73 இன் கீழ் வங்கியிலிருந்து கிடைத்த கணக்கு மீதியின் பிரகாரம் சீராக்கப்பட்டுள்ளது. |
| (ii) | மீளாய்வாண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்குரிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் மற்றும் 2018 ஆம் ஆண்டிற்குரிய அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்குரிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களை பெற்றுத்தருமாறு மாகாண வருமான திணைக்களத்திற்கு கடிதம் மூலம் பல்வேறு சந்தர்ப்பங்களில அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | முன்னைய ஆண்டின் இறுதியில் நிதி நிலைமைக்கூற்றின் பிரகாரம் திரண்ட நிதியம் மற்றும் பற்றாக்குறை கணக்கு மீதிகள் ரூபா 34,506,547 ஆன போதிலும், மீளாய்வாண்டின் பேரேட்டின் ஆரம்ப மீதி ரூபா 31,814,523 ஆக ரூபா 2,692,024 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதியை இனங்கண்டு ஆரம்ப மீதி பதிவு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (iv) | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 50 காணிகள் மற்றும் 45 கட்டிடங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | காணியின் உரித்தினை பெற்றுக்கொள்வதற்காக உரிய ஆவணங்கள் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | இயந்திரங்கள் மற்றும் பொறிகளின் பதிவேட்டில் பெக்கோ லேடரின் பெறுமதி ரூபா 16,695,000 ஆகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 16,950,000 ஆகவும் காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 255,000 ஆன வேறுபாடொன்று நிலவியது. | சரியான பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். திருத்தப்பட்டதென அறிவிக்கின்றேன். |
| (ii) | கடன் பட்டோர் பட்டியலின் பிரகாரம் பொது மற்றும் வியாபார கடன் பட்டோர் மீதி ரூபா 1,307,984 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பட்டோலைகளில் மீதியானது ரூபா 30,433,914 ஆனமையால் ரூபா 29,125,914 ஆன இணக்கமின்மையொன்று காணப்பட்டது. | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் இணக்கம் செய்யப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கடன் கொடுத்தோர் பட்டியலின் பிரகாரம் பொது மற்றும் வியாபார கடன் கொடுத்தோர் மீதி ரூபா 2,133,534 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கடன் கொடுத்தோர் பட்டோலைகளில் மீதியானது ரூபா 32,814,426 ஆனமையால் ரூபா 30,680,892 ஆன இணக்கமின்மையொன்று காணப்பட்டது. | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் இணக்கம் செய்யப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iv) | மீளாய்வாண்டின் நிதி நிலமைக்கூற்றின் பிரகாரம் காசு மற்றும் காசுக்கு சமனானவற்றின் பெறுமதி ரூபா 16,601,666 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறிப்பு இலக்கம் 11 இல் காசு மற்றும் காசுக்கு சமனானவற்றின் பெறுமதி ரூபா 19,928,960 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 3,327,294 ஆன இணக்கமின்மையொன்று காணப்பட்டது. | உரிய வேறுபாடுகள் இணக்கம் செய்யப்பட்டு கணக்குகள் திருத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். நிலையான வைப்புக்களின் மீதியும் காசு மற்றும் காசுக்கு சமனானவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| (v) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் திரண்ட நிதியக் கணக்கின் மீதியானது 32,437,701 ஆன போதிலும், பேரேட்டின் பிரகாரம் அந்த மீதியானது ரூபா 34,506,547 ஆனமையால் ரூபா 2,068,846 ஆன இணக்கமின்மையொன்று நிலவியது. | உரிய வேறுபாடுகள் இணக்கம் செய்யப்பட்டு கணக்குகள் திருத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படாமை** | | |
| ரூபா 126,884,602 கூட்டுத்தொகையான 06 கணக்கு விடயங்களுக்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஈ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிதியாண்டின் இறுதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த 1997-2017 இற்கு இடைப்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற 20 பெற வேண்டிய கணக்கு மீதிகளுக்குரியதாக ரூபா 259,814 கூட்டுத்தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய தொகை இனங்காணப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குத்தகையாளர்கள் மரணமடைதல், குடியிருப்பினை விட்டு அகலுதல் காரணமாக ரூபா 23,911 தொகையை அறவிட முடியாததாக கருதி பதிவளிப்பதற்கான அங்கீகாரம் முன்வைக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1,519 தொகை அஅறவிடப்பட்டுள்ளதுடன், எஞ்சிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த தொழிற்சாலைக் கடன்பட்டோர் மீதிகள் 04 இற்குரிய ரூபா 1,361,024 தொகை 1-2 இற்கு இடைப்பட்ட காலமாக | கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளூராட்சி திணைக்களத்திடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த தொழிற்சாலைக் கடன் கொடுத்தோர் மீதிகள் 08 இற்குரிய ரூபா 1,693,026 தொகை 1-2 இற்கு இடைப்பட்ட காலமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 365,100 தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன், மிகுதியை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iv) | 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான ரூபா 1,864,825 பெறுமதியான 79 கேள்வி வைப்பு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (v) | 2010 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலும் ரூபா 1,265,119 பெறுமதியான 10 கைத்தொழில் வைப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

**கணக்காய்வு அவதானிப்பு**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் | | | |
| (i) | 147 மற்றும் 149 ஆம் பிரிவு | பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் பெருமளவிலான வியாபார நிறுவனங்களிடமிருந்து அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அனைத்து வியாபார நிறுவனங்களிடமிருந்து அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | பட்டியலொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 150(i), 152(i) மற்றும் 153(i) ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்கான தொழிற்சாலை, வணிக வியாபார மற்றும் தொழில்கள் மற்றும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் தொடர்பான பட்டியல் தாயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பட்டியலை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொழிற்சாலைகள் மற்றும் வணிக வியாபாரங்களுக்கான பட்டியல் தாயாரிக்கப்பட்டுனள்ளதுடன், தொழில்கள் மற்றும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் தொடர்பான பட்டியல் தாயாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iii) | 158 ஆம் பிரிவு | நிலுவை வீதவரி தொடர்பில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிராததுடன், தாமதித்து செலுத்தப்படும் வீதவரிகளுக்காக தண்டப்பணங்களை | வீதவரி செலுத்தாமை தொடர்பில் பிடியாணை பிறப்பிப்பதற்கு மற்றும் தாமதித்து செலுத்தப்படும் | ஏற்றுக்கொள்கின்றேன். பிடியாணை பிறப்பிக்கப்பட்டிராமையால் தாமதித்து செலுத்தப்படும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அறவிடுதலும் இடம்பெற்றிருக்கவில்லை. | வீதவரிகளுக்காக தண்டப்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வீதவரிகளுக்காக தண்டப்பணங்களை அறவிடுவதற்கு முடியாது போயிருந்தது. |
| **(ஆ)** | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதிக் கோவை<br>---------------------------- | | | |
| | விதி இலக்கம் 203,214 மற்றும் 218 | சபையின் ஆதனங்கள் தொடர்பில் முழுமையான விசாரணையொன்றினை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்கள் தொடர்பில் முழுமையான விசாரணையொன்றினை மேற்கொள்ளப்பட வேண்டியமை. | 2018.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| **(இ)** | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>---------------------------- | | | |
| | நிதிப்பிரமாணம் 1645 (ஆ) பந்தி | மீளாய்வாண்டில் ரூபா 150,427 பெறுமதியான வாகன பழுதுபார்த்தல்கள் மற்றும் உதிரிப்பாகங்களின் கொள்வனவு தொடர்பில் சம்பவக் குறிப்பு புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | சம்பவக் குறிப்பு புத்தகங்களில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஊழியர் பிணை வைப்புப் பெறுமதியான ரூபா 81,836 ஆன தொகையானது போதியளவான அதிகாரமின்றி பேரேட்டுக் குறிப்பு 05 இன் மூலம் ஊழியர் பிணை வைப்புக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | ஊழியர் பிணை வைப்புக் கணக்கில் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2019 ஆம் ஆண்டின் போது இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,733,289 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,123,961 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,946,160 | 3,428,682 | 3,197,660 | 3,997,322 | 2,622,000 | 2,945,700 | 2,594,159 | 3,766,601 |
| (ii) | வாடகை | 5,679,440 | 9,318,248 | 9,087,225 | 261,691 | 7,551,000 | 4,406,499 | 4,406,499 | 259,815 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 495,000 | 244,709 | 244,709 | - | 465,000 | 152,979 | 152,979 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 12,161,650 | 11,815,145 | 11,584,123 | 10,845,837 | 10,119,500 | 9,713,280 | 9,713,280 | 19,557,724 |
| (v) | சம்பள மீளளிப்பு | 45,762,000 | 27182,874 | 26,951,852 | - | 28,764,000 | 22,921,626 | 22,921,626 | - |
| (vi) | சம்பள மீளளிப்புடன் ஏனை வருமானம் | 57,923,650 | 38,998,020 | 38,766,998 | - | 38,883,500 | 32,634,907 | 32,634,907 | 19,557,724 |
| | மொத்தம் | 124,967,900 | 90,987,678 | 89,832,567 | 15,104,850 | 88,405,000 | 72,774,991 | 72,423,450 | 43,141,864 |

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சபையினால் ரூபா 124,967,900 ஆன வருமானம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 89,832,567 ஆக இருந்ததுடன், அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 72 சதவீதமாக இருந்தது. | வருமான மதிப்பீடுகளை அடைந்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சபையின் பதிவேடுகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய நிலுவை வீதவரித் தொகையானது ரூபா 3,343,695 ஆக இருந்ததுடன், 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக அந்த நிலுவை மீதியானது 7 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | நிலுவை வீதவரித் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டின் போது நிலுவை வீதவரியை அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மெதிரிகிரிய சபைக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை நீர் வரித் தொகையானது ரூபா 653,268 ஆக இருந்ததுடன், அந்த வரித் தொகையை அறவிட போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீர் வரிக் கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iii) | மீளாய்வாண்டிற்காக 33 முயற்சியாளர்களிடமிருந்து அறவிடப்படக்கூடியதாக இருந்த ரூபா 82,800 தொகையான வியாபார வரி வருமானமொன்றினை சேகரிப்பதற்கு சபை தவறியுள்ளதாக மதிப்பாய்வு அறிக்கைகளின் மூலம் புலப்படுத்தப்பட்டது. | வியாபார வரியினை அறவிடுவதற்கு துரதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கணக்காய்வின் அறிவுரைகளுக்கமைய அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 2.2.4 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு சொந்தமான பெக்கோ லோடர், மோட்டர் கிரேடர், லொரி நீர் பவுஸர் டிப்பர் வண்டியானது வாடகை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள போதிலும், அதற்காக அறவிடப்பட வேண்டிடிய ரூபா 989,155 ஆன தொகை 2018 திசெம்பர் 27 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு துர்தமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | ரூபா 209,100 தொகை 2019 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்டுள்ளதுடன், ரூபா 21,900 தொகை பொதுப் பணிகளுக்குரியது ஆகும். மிகுதியை அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 2.2.5 ஏனைய வருமானம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| **(i)** | அதிகாரப்பிரதேசத்தில் பல்வேறு நிறுவனங்களால் காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தல் பலகைகள் பெரும் எண்ணிக்கையில் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் செப்தம்பர் இறுதியளவில் அறவிடப்பட்டிருந்தது 17 அறிவித்தல் பலகைகளிலிருந்து ரூபா 40,747 ஆன வருமானம் மாத்திரம் ஆகும். | பிரதேசத்தின் அனைத்து அறிவித்தல் பலகைகளினூடாக கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மதிப்பாய்வொன்றினை மேற்கொண்டு உரிய தரப்பினருக்கு கட்டணங்களை செலுத்துமாறு அறிவித்து, கட்டணம் செலுத்தாத அறிவித்தல் பலகைகள் அகற்றப்பட்டுள்ளன. |
| **(ii)** | சபையின் அதிகாரப்பிரதேசத்தில தாபிக்கப்பட்டுள்ள முற்சக்கர வண்டி தரிப்பிடங்களில் சபைக்கு அறவிடப்பட வேண்டிய வருமானத்தினை உப விதி விதித்து சட்டரீதியாக்குவதன் மூலம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உப விதி விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | சபைக்கு சொந்தமான காணியொன்று இல்லாதிருந்தமையால், உப விதியினை விதிப்பதிலான இயலுமை தொடர்பில் சிக்கல்கள் நிலவுகின்றமையை குறிப்பிடுகின்றேன். |

**2.2.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 6,496,103 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமான ரூபா 4,349,737 ஆகும். | அனைத்து நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணங்களை இனங்கண்டு சபைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணங்களை பெற்றுத்தருமாறு மாககாண திறைசேரியிடம் கோரப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளுக்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும்,2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 10 விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்படவில்லை. | உப விதிகள் விதிக்கப்பட்டு அந்த பணிகளை ஒழுங்குபடுத்தி கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**(அ) செயல்நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய 11 பணிகளுக்காக மாத்திரம் வருடாந்த பாதீட்டினூடாக | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயலாற்றுவதற்கு | ஏற்றுக்கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதால், 04 பணிகளை நிறைவேற்ற முடியாதிருந்தது. | நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பில் சபை அறிந்திருந்த போதிலும், அந்த நோக்கங்களிடையே சபைக்குரிய நோக்கங்கள் சரியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சபையின் நோக்கங்கள் இனங்காணப்பட வேண்டும். | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்காலத்தில செயற்படுகின்றேன். |
| (ii) | பாதீட்டினை தயாரிக்கும் போது தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் 2017 யூலை 31 ஆந் திகதிய BD/CBD/4/1/2-2018 சுற்றறிக்கையில் அஅறிமுகப்படுத்தப்பட்டிருந்த குறிகாட்டிகளுக்காக தரவுகளை சேகரிக்கும் நடைமுறையொன்று காணப்படவில்லை. | அறிவுரைகளுக்க மைய செயற்பட வேண்டும். | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்காலத்தில செயற்படுகின்றேன். |
| (iii) | இலக்குகளை அண்மிக்கும் போது உரிய பணிகளை கண்காணிப்பதற்கான அடைவுகள் இனங்காணப்பட்டிராதமையால், குறிகாட்டிகளுக்காக தரவுகளை சேகரிக்கும் நடைமுறையொன்று காணப்படவில்லை. | தரவுகளை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்காலத்தில செயற்படுகின்றேன். |
| (iv) | 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அண்மிப்பதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு சபையினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இனங்கண்டு நிதியேற்பாடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்காலத்தில செயற்படுகின்றேன். |
| (v) | இலக்குகளை அண்மிப்பதற்காக நிறுவனத்தின் பதவியணியை பயிற்றுவிக்கும் நடைமுறையொன்று காணப்படாமையால், நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பில் தொடர்புகொள்ள வேண்டிய ஏனைய அரச நிறுவனங்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | பயிற்சி நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்காலத்தில செயற்படுகின்றேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைகள் உள் கிராமங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திவுலன்கடவல வாரச்சந்தை ரூபா 2,247,853 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 திசெம்பர் 13 ஆந் திகதி வரையிலும், 04 வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (இ) | சட்டரீதியாக்கப்படாத நிர்மாணங்கள் மற்றும் சட்டரீதியாக்குவதற்கு தாமதமாகவுள்ள அத்துமீறிய நிர்மாணங்களிலிருந்து தண்டப்பணங்களை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | நிர்மாண பணிகளை சட்டரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிர்மாண பணிகளை சட்டரீதியாக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. நிர்மாணங்களை சட்டரீதியாக்குவதற்கு வந்திருந்த போதிலும், அவர்களுக்கு காணிகளின் உரித்தினை உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தவறியிருந்தது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செயலாளர் பதவி வெற்றிடமாக உள்ளதுடன்,2017 ஒக்தோபர் 21 முதல் பதிற்கடமை செயலாளர் ஒருவர் அந்த பதவியின் கடமைகளை மேவுகை செய்திருந்தார். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த வெற்றிடம் தொடர்பில்மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு மற்றும் வட மத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | இரண்டாம் நிலையிலுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் 03, தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியொன்று,நூலகர் பதவியொன்று,தளப் பரிசோதகர் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கமைய வெற்றிடங்களை நிரப்புவதற்கும், | அந்த உத்தியோகத்தர்களுக்காக வழங்கப்படும் கடிதங்களின் மூலம் கோரிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | பதவியொன்று மற்றும் முன்பள்ளி ஆசிரியர் பதவியொன்றுமாக முகாமைத்துவ உதவியாளர் பதவியொன்று 07 பதவிகளின் வெற்றிடம் நிலவியதுடன், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் உள்ளடங்காத 02 பதவியணிகளுக்கான ஆட்சேர்ப்புகள் இடம்பெற்றிருந்தது. | தேவைப்பாட்டின் அடிப்படையில் பதவியணியில் திருத்தங்களை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விடுக்கப்பட்டுள்ளதுடன் , அந்த பதவிகளில் பணிகளை மேவுகை செய்வதற்காக மிகைப் பதவியணி ஈடுபடுத்தப்பட்டுள்ளது. |
| (இ) | ஆரம்ப நிலைக்குரிய சாரதி,குழாய் பொருத்துநர் மற்றம் நீர் பம்பி இயக்குநர் ஆகிள 03 பதவிகள் வெற்றிடமாக உள்ளதுடன், அங்கீக்ரிக்க்ப்பட்ட பதவியணியினுள் உள்ளடங்காத 02 அலுவலக உதவியாளர் பதவிகள், கள தொழிலாளர் பதவியொன்று,சுகாதார தொழிலாளர் பதவியொன்று மற்றும் 02 நூலக உதவியாளர் பதவிகளுமாக 05 பதவிகளுக்கு 09 நபர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தன. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கமைய வெற்றிடங்களை நிரப்புவதற்கும், தேவைப்பாட்டின் அடிப்படையில் பதவியணியில் திருத்தங்களை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிதேச சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய கடமைகளின் அளவானது சிக்கலானதாக இருந்தமையால் பிலிசரு செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதின் மூலம் மிகை பதவியணியை ஈடுபடுத்த நேர்ந்துள்ளது. |
| (ஈ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரித்தல்லாத 07 பதவிகளுக்காக அமைய அடிப்படையில் 07 ஊழியர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். | தேவைப்பாட்டின் அடிப்படையில் பதவியணியில் திருத்தங்களை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயற்திட்டத்திற்காக கழிவுகளை அகற்றுவதனை முறைமைப்படுத்துவதற்காகவும், அமைய பதவியணியொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை அதிகரிப்பதற்காக மாகாண உள்ளூராட்சி திணைக்களத்திடம் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது. |

**(உ) ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்படாதுள்ள ரூபா 45,026 தொகையான ஊழியர் கடன் மீதிகள் 02 இனை உரிய | கடனை அறவிடுவதற்கு தாபனவிதிக் கோவையின் | 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 21,147 |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களிடம் அல்லது பிணையாளர்களிடம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளின் பிரகாரம் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆன கடன் அறவிடப்பட்டுள்ளதுடன், மரணமடைந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 32,679 தொகையை பதிவளிப்பதற்கு அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தல்**

| | | | |
|---|---|---|---|
| **(அ)** | ரூபா 733,500 பெறுமதியான இயந்திரர உபகரணங்களின் 06 மீதிகளின் பெறுமதிகளும் ரூபா 259,427 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரண மீதிகள் 08 இன் பெறுமதியும், ரூபா 32,400 தொகையான 02 கணனி மொனிட்டர்களின் பெறுமதிகளும் உரிய சொத்துப் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணிச்செல்லப்பட வேண்டும். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**3.4.2 வாகனப் பயன்பாடு**

| | | | |
|---|---|---|---|
| **(அ)** | சபைக்கு சொந்தமான வாகனங்களில் பயன்படுத்தப்படும் எரிபொருளின் அளவு தொடர்பில் பரிசோதனை மேற்கொண்டு வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தப்படும் எரிபொருளின் அளவு பரிசோதிக்கப்பட்டு சம்பவக் குறிப்பு புத்தகங்களில் பதிவு செய்யப்பட வேண்டும். | சில வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனையினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். |
| **(ஆ)** | சபையினால் பயன்படுத்தப்படும் 02 வாகனங்களின் உரித்தினை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 02 வாகனங்கள் தொடர்பில் மோர்டார் வாகனங்கள் ஆணையாளரிடம் அறிவித்துள்ளதுடன், கடன் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் உரிய நிதி நிறுவனத்தில் காணப்படுவதாக குறிப்பிடுகின்றேன். |

**3.4.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

| | | |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 03 வாாகனங்கள் 1 முதல் 10 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியினுள் விளைவற்று மற்றும் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்பட்டவாறு காணப்பட்டது. | பயன்படுத்தக்கூடிய சொத்துக்கள் உடனடியாக பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கும், பயன்படுத்த முடியாத சொத்துக்களை கைத்தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இரண்டு வாகனங்களை பழுதுபார்ப்பதற்கும், ஒன்றை பிரதம செயலாளரின் அலுவலகத்திற்கு அனுப்புவததற்கும் நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் இணக்கம் செய்யும் போது 06 வருமான விடயங்களின் 09 சதவீதம் முதல் 74 சதவீதம் வரையிலும், 08 செலவின விடயஙகளின் 06 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையிலும் விலகள்கள் காணப்பட்டன. | பாதீடானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2019 ஆம் ஆண்டின் போது திருத்திக் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வட மத்திய பிரதான செயலாளரின் என்சீபீ/சீஏ/01 ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் 2016 மே 11 ஆந் திகதிய கடித்தின் மூலம் கணக்காய்வு மற்றும் | 02 மாதஙகளுக்கு ஒரு தடவைகணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் நடாத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2019 ஆம் ஆண்டு முதல்நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |

முகாமைத்துவ குழுவானது ஒவ்வொரு 02 மாதங்களுக்கு ஒரு தடவையும் நடாத்தப்பட வேண்டிய போதிலும்,2018 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஒன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.